Answer

(a) Steps are in progress for the installation of a millk booth at Jawaharnagar Bus Terminus.

(b&c) Action is in progress for the shifting of a booth from Ernakulam and orders have been placed for the purchase of a new booth.

(d) Booths will be received within two weeks time.

(e&f) The booth will be opened and start functioning as early as possible.

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

பல்வேறு துறைகளிலும் தமிழ் அறியாதோர் தொகை

63. [600] ஸ்ரீ. என். கணபதி : கீழ் காணும் வினாக்களுக்கு முதல் மந்திரி அவர்கள் விடை பகர்வார்களாக :

(எ) கேள்வி 919-க்கு 6-3-1969 அன்று முதலமைச்சர் விடை நல்கிய போது (நம். 16057/எம். 2/69/பி. டி.. பப்ளிக் (மிஸ்லினேனியஸ்) டிப்பார்ட் மென்று டேட்டட் 3-1-1970 இயக்குநர் அலுவலகங்கள், மாவட்ட அலுவல கங்கள் ஆகியவற்றில் தமிழ் அறிந்தோர் அல்லது பயின்றோர் அல்லாத அலுவல கங்கள் பல விபரங்கள் அடங்கிய பட்டியலில் காணப்படுவதால் அவ்வலுவல கங்களில் தமிழ் அறிந்தோர் அல்லது பயின்றோரை நியமிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுமா ;

(பி) மேற்படி பட்டியலில் தமிழ்ப்பிரதேசங்களாக ஜி. ஓ. (எம். எஸ்.) 110 பப்ளிக் (ரூல்ஸ்) டிப்பார்ட்மென்ட் டேட்டட் 21-3-1966-ன்படி பிரகடனிக் கப்பட்ட இடங்களில் உள்ள அலுவலகங்கள் யாவை ;

(சி) இவ்வலுவலகங்களில் தற்போது தமிழ் அறிந்த அல்லது பயிற்சி பெற்ற குமஸ்தாக்களாவது உள்ளனரா ;

(டி) இல்லையெனில் அத்தகையோரை நியமிக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கலாமா ?

விடை

(எ) தமிழ் அறிந்த அலுவலர்கள் இல்லாத எல்லா அலுவலகங்களிலும் அத்தகைய அலுவலர்கள் இருக்கவேண்டுமென்று அரசு கருதுகிறதில்லை மொழி சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில், முடியுமானவரை, மொழி சிறுபான்மை யினர் பேசும் மொழி அறிந்த அலுவலர்களே நியமிக்கப்படவேண்டுமென்று ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மொழி சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் வேலை பார்க்கும் (தமிழர்கள் மற்றும் கன்னடியர்கள் அல்லாத) எல்லா அலுவலர்களுக்கும் சிறுபான்மை மொழியில் (தமிழ் அல்லது கன்னடம்) கட்டாய மொழித்தேர்வு ஒன்றும் அரசு குறிப்பிட்டுள்ளது.

(பி & சி) தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது.

(டி) தமிழ் சிறுபான்மையினர் வாழும் பகுதிகளிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களிலும் தமிழ் அறிந்த அலுவலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேவிகுளத்தில் ஸ்டேட்பாங்க் ஆப் டிராவன்கூருக்கு நிலம் வழங்குதல்

64. [901] ஸ்ரீ. என். கணபதி : கீழ் காணும் வினாக்களுக்கு ரவன்யூ மந்திரி அவர்கள் விடை பகர்வார்களாக:

(எ) கோட்டயம் மாவட்டத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் டிராவன்கூருக்கு ஒரு கிளை திறப்பதற்காக கட்டிடம் கட்ட அரசாங்க பூமியில் 10 சென்று